# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 13.03.2026**

**OS.No. 131/2011**

**வழக்கு சாட்சி PW.1 – சுரேஷ் பால்ராஜ் , த/பெ. பாஸ்கரன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராது மற்றும் நிரூபண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்திரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் அசல் வழக்கு எண் .134/2014 என்ற வழக்கில் குறுக்கு விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான் . அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் , நான் அசல் வழக்கு எண்.131/2011 என்ற வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் தவறு என வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பிளாட் எண்.167 என் பெயரில் பட்டா உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் , அது பழைய பிளாட் எண்ணாகும் . பிளாட் எண் மாற்றப்பட்டுள்ளது தொடர்புடைய வருவாய்த்துறை உத்தரவுகளோ , ஆணைகளோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் பிளாட் எண் .167 ல் எனக்கு பட்டா வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு 1978 ம் வருடம் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சான்று எனது பிறப்புச் சான்றிதழ் என்றால் சரிதான் . அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி எனது பிறந்த தேதி 04.03.1972 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில்

எனக்கு 6 வயதில் பட்டா கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், என் பெயரில் எனது அப்பா பெற்றுள்ளார். என் பெயரில் அளிக்கப்பட்ட பிளாட் எண்.167, 8/327 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிளாட் எண்.161, 8/328 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உட்பிரிவு செய்யப்பட்டது தொடர்புடைய வருவாய்த்துறை ஆவணங்கள் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் எனது தரப்பு வாதி சான்றாவணங்களில் அத்தகைய உட்பிரிவு மாறுதல் காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எனது நிரூபண வாக்குமூலத்தில் தெற்குபுறம் தங்க்வேல் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . என்னுடைய தகப்பானாருக்கு பிளாட் எண் .161 பாத்தியமாகும். எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பெயரில் உள்ள பட்டா எந்த ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்துவிட்டு அந்த ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்று தெரிவித்தார். வா.சா.ஆ.2 ஆவணம் கிரையப் பத்திரம் என்றால் சரிதான் . அந்த கிரைய ஆவணம் எனது தந்தை நிதின்ஷா என்பவருக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரிதான். அதில் கிரையச் சொத்தை எனது அப்பா சுயாஜிதமாக சம்பாதித்து எனச் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

தாவா சொத்தை எனது அப்பா கிரையம் மூலம் பெற்றதாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் சங்கதி எதுவும் இல்லை என்றால் சரிதான், எனது அப்பா பட்டா பெற்று அந்த இடத்தை கிரையம் கொடுத்துள்ளார். அந்த கிரைய ஆவணத்தின் வடக்கே பொதுவல் நிலமும், கொடைக்கானல் மதுரை மெயின் ரோடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள வடக்கே உள்ள பாதை வழியாகத்தான்

பிரதிவாதிக்கு சொந்தமான நடைபாதை, போக்குவரத்து, தண்ணீர் எடுத்தும் வரும் பயன்பாட்டுப் பாதை உள்ளது என்றால் சரியல்ல . எனது பிராதில் தாவா சொத்திற்கு வடக்கே ரோடு எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் , தெற்கே முன்சிபாலிட்டி சிமெண்ட் ரோடு எனச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் பெயரில் உள்ள நான்குமால் விபரங்களை காட்டக்கூடிய உரிமை ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை மீண்டும் என் பெயருக்கு கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய ஆவணம் வா .சா.ஆ.3 என்றால் சரிதான் . வா.சா.ஆ.3 ஆவணத்தில் தெற்கே மனை எண் .167 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் , தெற்கே சிமெண்ட் ரோடு தங்கவேல் ஆக்கிரமித்துள்ள இடம் எனச் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, தெற்கே எனது இடத்தை தாண்டிதான் அந்த ஆக்கிரமிப்பு இடம் உள்ளது.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிளாட் எண்.167 என் பெயரிலும், என் மனைவி பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . அரசால் வழங்கப்படும் பட்டாவிற்கு ஒரு சொத்திற்கு இரண்டு நபர்கள் பெயரில் பட்டா வழங்கப்படமாட்டது என்றால் சரிதான். அரசாணை மற்றும் அரசு விதிமுறைப்படி நகராட்சி பகுதிகளில் மனையிடம் வழங்கும்பொழுது ஒரு நபருக்கு 1.5 சென்ட் நிலம் மட்டும்தான் வழங்கப்படும் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் ஆவணம் SLR பதிவேடு என் சொத்து தொடர்புடையது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா .சா.ஆ.6 வில்லங்கச்சான்று என்றால் சரிதான் . வில்லங்கச்சான்றிழ் சர்வே எண் .8/327 உட்பிரிவு செய்யப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான், உட்பிரிவுக்கு முன் எடுக்கப்பட்ட வில்லங்கச்சான்று ஆகும். அந்த வில்லங்கச்சான்றிதழில் கதவு இலக்கம் 4/115E-23 என்று உள்ளது என்றால் சரிதான் . எனது பிராதில் சொத்து விபரத்தில் கதவு எண்.115E-23, 23A, 23B எனச்

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . வில்லங்கச்சான்றிதழில் உள்ள கதவு இலக்கத்திற்கும் , தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கதவிலக்கத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான் . வா.சா.ஆ.6 வில்லங்கச்சான்றிழ் வடக்கே பாதை என உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.7 வீட்டுவரி இரசீதில் குறிப்பிட்டுள்ள கதவு இலக்கத்திற்கும், பிராதில் உள்ள கதவு இலக்கத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை , அது நகராட்சி உட்பிரிவாகும். பிளாட் எண் .167 ற்கு என் பெயரிலும் , என் மனைவி பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக எனது குறுக்கு விசாரணையான பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். பிளாட் எண். 167 ற்கு என் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் பட்டா ஏற்பட்டதை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை , அவசியம் ஏற்படவில்லை. உட்பிரிவானது 8/328 என்பது பிளாட் எண் .161 சம்பந்தப்பட்டது என்றால் ஆவணங்களைப்பார்த்தால்தான் சொல்ல இயலும். வா.சா.ஆ.9 ஆவணமான பட்டாப்படி 8/328 எனது மனைவி கரோலின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . சர்வே எண் .8/328 பிளாட் எண் .161 தொடர்புடையது என்றால் சரிதான் . பிளாட் எண் .167 அரசால் எனக்கு பட்டா வழங்கப்பட்டதா அல்லது எனது அப்பாவிற்கு வழஙகப்பட்டதா என்றால் எனது அப்பாவிற்கு வழங்கப்பட்டது . பிளாட் எண்.161 எனது அப்பாவிற்கு அரசால் பட்டா வழங்கப்பட்டு , அவர் வேறு ஒருவருக்கு கிரையம் கொடுத்து பிறகு அதை நான் அந்த நபரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன் . சர்வே எண்.8/328, பிளாட் எண்.161 தொடர்புடையது என்றால் அரசால் வழங்கப்பட்டுள்ள பட்டா எண்கள் விபரங்கள் எனக்குத் தெளிவாக தெரியாது. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கியபோது எனக்கு கிரையம் கொடுத்த நபர் அதிகார முகவர் மூலம் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான் . அந்த அதிகார முகவர் எனது உறவினர் என்றால் சரியல்ல.

நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தில் எனக்கு கிரையம் கொடுத்த நபர் தொடர்புடைய அதிகார முகவர் ஆவண பத்திர விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அதிகார முகவர் தொடர்புடைய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை . எனது அப்பாவிற்கு அரசால் எந்தவிதமான பட்டாவும் வழங்கப்படவில்லை என்றாலும், நான் எனது உறவினர்களான சேதுமணி ஆகியோர்களுடன் இணைந்து எனது அப்பா பெயரில் அசையா சொத்து இருந்தது போன்று ஆவணத்தை உற்பத்தி செய்து அரசு பொதுவல் நிலத்தை பிரதிவாதி பயன்பாட்டு இடத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . ஒரே பட்டா ஆவணத்தில் இரண்டு பெயர்கள் உள்ளதால் அதில் உரிமைத் தொடர்புடைய பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல , ஒரே பட்டாவில் இரண்டு பெயர்கள் இல்லை . எனக்கு உரிமை வயது அடையாத நிலையில் அரசால் இளவருக்கு பட்டா வழங்க விதிமுறைகள் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்து தொடர்பாக உரிமை பிரச்சனை நிலவுவதால் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை மட்டும் கோரியுள்ள இந்த வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பொதுவல் நிலம் என்பது வருவாய்த்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான நிலம் என்றாலும் , அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் நான் கோரியுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல . வா.சா.ஆ.8 எனது பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான் , அது பிளாட் எண் .167 தொடர்புடையது என்றால் சரிதான் . வா.சா.ஆ.8 பட்டாவானது 18.08.2008 ல் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான் . நான் கொடைக்கானல் கூட்டுறவு வங்கியில் பிளாட் எண் .167 சொத்தைத்தான் அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரிதான் . அடமானமானது 2001 ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.8 ஆவணத்தின் படி பட்டாவானது 2008 ல் வழங்கப்பட்டுள்ளது என்றாலும் , நான் 2001 ல் அடமானம் வைத்ததாக சொல்லப்படுவது முரண்பாடாக உள்ளது என்றால் 2008 பட்டாவானது ரீ சர்வே பட்டாவாகும். ரீ சர்வே தொடர்புடைய வருவாய் நடவடிக்கைகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணம் ரீ சர்வே நடவடிக்கையை காட்டக்கூடிய ஆவணம் என்றால் சர்வேயரின் வரைபடங்கள் தான் அந்த ஆவணங்கள் ஆகும் . தாவா சொத்தை, எனது சொத்துப் போன்று இடையூறு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.12 18:20:02 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.